DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | :S.C.16 / 2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | :பொன்னழகு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2021

-----

**முதல் விசாரணை:**

நான் கவணம்பட்டியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். எனக்கு இவ்வழக்கு விபரம் தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் குறித்து தெரியாது. அ.சா.1க்கு தீக்காயம் ஏற்பட்டு உசிலம்பட்டி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நான் அவரை சென்று பார்த்தேன். அவருக்கு எப்படிக் காயம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

கடந்த 17.07.2014-ம் தேதி நானும் நல்லம்மாள் என்பவரும் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது சுமார் மாலை 5.00 மணிக்கு அ.சா.1ன் அலறல் சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்த்தபோது அ.சா.1ன் உடலில் தீப்பற்றி எரிந்துக் கொண்டிருந்தது. நானும் நல்லம்மாளும் தீயை அணைத்தோம். எதிரியை விசாரித்த போது சமையல் செய்யும் போது தீப்பற்றி எரிந்ததது என்றும், அ.சா.1ஐ விசாரித்தபோது எதிரி தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தார் என்றும், தற்போது எதிரியைக் காப்பாற்றும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:** இல்லை

ஒம் /பிரேம்ஆனந்த், 12.02.2021
சார்பு நீதபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | :S.C.16 / 2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | :அழகர்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2021

-----

**முதல் விசாரணை:**

நான் நடுப்பட்டியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் அவர் என் அண்ணன் மருமகன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் செல்லையா எனக்கு போன் செய்து எதிரியின் மனைவிக்கு தீப்பிடித்ததாகக் கூறினார். நானும் சக்தி என்பவரும் இருசக்கர வாகனத்தில் கவணம்பட்டிக்கு எதிரியின் வீட்டிற்குச் சென்றோம். அங்கு போலீசார் வந்து தீப்பிடித்த இடத்தை பார்த்தார்கள். ஏதோ எழுதினார்கள். படம் வரைந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் அதன்பேரில் நான் கையொப்பம் செய்துக் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:** இல்லை.

ஒம் /பிரேம்ஆனந்த், 12.02.2021
சார்பு நீதபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.